நடந்த கதை சொல்லம்மா நந்திக்கடலம்மா
நாங்க கிடந்த கிடை யாவையும் கண்டவ நீயம்மா
அம்மா அம்மா இன்னும் சோகம் ஆறலயோ
அம்மா அம்மா இன்னும் தாகம் ஆறலயே
விழி வேர்க்கும் பொழுதாக வாழ்வை கடக்கிறோம்
எந்த வலியேதும் தெரியாமல் நாளை களிக்கிறோம்
சொல்லம்மா மௌனம் ஏனம்மா
சொல்லம்மா தரும் சாட்சியே நீயம்மா

எறிகணைக்குள் மூச்சடக்கி எழுந்த கதை சொல்லம்மா
எரியும் மேனியோடு நின்ற அவலக்கதை சொல்லம்மா
எங்கே எங்கள் செல்வங்களை தேடுகிறோம் நாம் அம்மா
எங்கே போயினர் என்றே சொல்லி சாட்சியமா நில்லம்மா
அழுதழுது விழிகள் இன்னும் காயவில்லை தாயே நாம் அழுங்குரல்கள் கேட்கிறதா
நீதிவேண்டும் தாயே
சொல்லம்மா மௌனம் ஏனம்மா
சொல்லம்மா தரும் சாட்சியே நீயம்மா

நடந்த கதை சொல்லம்மா நந்திக்கடலம்மா

சாவரங்கில் நாங்கள் கண்ட துயரக்கதை சொல்லம்மா
சரித்திரமாய் களமாடிய வீரர் கதை சொல்லம்மா
எங்கே போனது எங்களின் தேசம் தேடுகிறோம் நாம்மம்மா
என்ன ஆகிடும் எங்களின் தாகம் வாடுகிறோம் நாளும் அம்மா
எரிதணலாய் வலிகள் இன்னும் மெலிகிறது தாயே இங்கு எழும்குரல்களின் ஒலிகள்
உனது புரிகிறதா தாயே
சொல்லம்மா மௌனம் ஏனம்மா
சொல்லம்மா தரும் சாட்சியே நீயம்மா

நடந்த கதை சொல்லம்மா நந்திக்கடலம்மா